BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# வனம் நாவல் வழி இருளர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்கள்

முனைவர் த. தங்கசெல்வி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி,
இராஜபாளையம், Email Id : selvi11041988@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்வியல் மாற்றம் என்பது அறிவுசார்ந்த மேம்பாடு. கால மாற்றத்திற்கு ஏற்ப ஒவ்வொருவடைய வாழ்விலும் அறிவுசார்ந்த மாற்றம் என்பது இன்றியமையாதது. மாற்றம் இருந்தால் மட்டுமே நாம் வளர்ச்சியடைவோம். இல்லையெனில் நாம் மட்டும் அல்ல, நம்முடைய இனமும் வளராது. ஒவ்வொரு இனக்குழுவிற்கும் இந்த வளர்ச்சி மாற்றம் தேவையாக இருக்கிறது. நாம் எங்கிருந்தாலும் உலகத்தோடு, உலக மாற்றங்களுக்கு ஏற்ப நாம் வாழ வேண்டும். வனம் என்ற நாவலில் இருளர் இன மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்கின்றனர். ஆனாலும் நாகரிகமும் தொழில்நுட்பமும் வளர வளர தங்களை அவர்கள் மாற்றிக் கொண்டு வாழ்க்கையில் மாற்றத்தைக் காண வேண்டும். காட்டுப் பகுதியில் வாழக்கூடிய அவர்கள் வாழ்வில், மாற்றம் இல்லையெனில் நாகரிக போக்கிற்கு இணையாக வளர முடியாது. எதுவும் தெரியாமலேயே இறப்பைத் தழுவ வேண்டியிருக்கும். மழைவாழ் மக்களான இவர்கள் கல்வி, விவசாயம், அடிப்படைத் தேவை போன்றவற்றில் மாற்றம் கண்ட செய்தியினை வனம் நாவலின் ஆசிரியர் ஆட்டனத்தி எடுத்துரைத்துள்ளார். இயற்கையோடு வாழும் இவர்கள் வாழ்வில் உண்டாகும் மாற்றத்தின் மூலம் அவர்கள் பயன்பெறும் நிகழ்வினையும் எடுத்துரைத்துள்ளார்.

**திறவுச் சொற்கள்**

இருளர், உண்டு உறைவிடப் பள்ளி, பட்டுவாடா, முட்டத்து வயல், கல்வி, விவசாயம், அடிப்படைத் தேவைகள்

## முன்னுரை

மனிதனாகப் பிறந்த அனைவருடைய வாழ்விலும் மாற்றம் வேண்டும். மாற்றம் வந்தால் வாழ்வு உயரும். வாழ்வு உயர்ந்தால் பல சாதனைகள் நிகழ்த்த முடியும். தனிமனிதன் மட்டுமல்ல ஒரு இனக்குழுவே வளர்ச்சியடையும். இதனால் தான் அனைவர் வாழ்விலும் மாற்றம் வேண்டும் என்று சான்றோர்கள் இயம்புகின்றனர். அந்த வகையில் வனம் நாவலில் கல்வி, வேளாண்மை, அன்றாடத் தேவை போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்கள் அவர்களுக்குப் பயன் அளிப்பதை ஆசிரியர் ஆட்டனத்தி வனம் நாவலில் விளம்பியுள்ளார். இந்த மாற்றங்கள் இருளர் இன மக்களின் வாழ்வில் உண்டாக்கிய வளர்ச்சியைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைத்துள்ளது.

## இயற்கையோடு இயைந்த மக்கள்

கோவை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வெள்ளையங்கிரி மலைகளில் வாழக்கூடியவர்கள் இவர்கள். இங்கு மட்டுமல்ல தமிழ்நாட்டின் நீலகிரி, பண்ணாரி ஆனைமலை, கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். இருளன் என்பதன் மற்றொரு பெயர் கோவன். கோயம்புத்தூர் மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். கோவன் என்ற பெயரை வைத்தே கோவன்புதூர் என்ற பெயர் வந்தது. பின் கோயம்புத்தூர் என மருவிற்று. இது இவர்களின் பூர்விகம் என்கின்றனர். இருளர் இனத்தில் ஏழு இனங்கள்

உள்ளன. ”இருளர் இனத்தில் இரு அகமனக் குழுவில் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. 1. குப்பெ, 2. சம்பெ, 3. தெவனெ, 4. கல்கட்டி, 5. குறுநகெ, 6. கொடுவே, 7. புங்கெ.” (நா.வானமாமலை, மக்களும் மரபுகளும் ப- 138).



இவர்கள் போராத்தி, சர்க்கார் போராத்தி, வெள்ளப்பதி, பொட்டப்பதி, சீங்கப்பதி, சாடிவயல் போன்ற ஊர்களில் வாழ்கின்றனர். இவர்கள் தங்களை மரத்தின் குழந்தைகள் என்றும், மரத்திலிருந்து பிறந்தவர்கள் என்றும் மரம் தான் தங்களின் அடையாளம் என்றும் கூறிக்கொள்கின்றனர். “கோத்திரம் குலம் என்பது போல் இருள் மரம் தான் இவர்களின் அடையாளம்.” என்கின்றனர். தங்களை மரத்தின் குழந்தைகளாக என்னும் இவர்கள் இயற்கை எங்கள் தாய் என்கின்றனர். இயற்கை என்றும் எங்களை பட்டினியாக இருக்க விடாது என்று உறுதியாக நம்புகின்றனர். இவ்வாறு இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்க்கை இருளர் இன மக்கள் வாழ்வதை நாவலின் வழி அறியமுடிகின்றது.

**கல்வியில் மாற்றம்**

கல்வியினால் மட்டுமே ஒரு சமூகத்தை மாற்ற முடியும். அதனால் தான் கல்விக்காக வள்ளுவர் தனி அதிகாரத்தையே உருவாக்கியுள்ளார். கல்வியே ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம். மற்ற அனைத்து செல்வங்களும் அழிந்து போகும் என்பதனை,

*“கேடில் விழுஞ்செல்வம் கல்வி ஒருவர்க்க*
*மாடல்ல மற்றை யவை”(குறள்.400)*

என்ற குறட்பா வழி அறியலாகின்றது. கல்வி குறித்து, அண்ணல் அம்பேத்கார், “பெண்கள் அடைந்த முன்னேற்றத்தின் அளவைக் கொண்டு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை நான் அளவிடுகிறேன்” என்கிறார். இதன் வாயிலாக கல்வியின் முக்கியத்துவத்தையும் அதே சமயம் பெண் கல்வி குறித்தும் அறிய முடிகின்றது.

காட்டுப் பகுதியில் வாழ்வதால் இவர்களுக்கு கல்வி என்பது அறியாத ஒன்று. அது நம் வாழ்விற்குத் தேவை என்பதை அறிந்து இருக்கின்றனர். மருதன், நஞ்சன் தலைமுறையினர் கல்வித் தேவை என்பதை அறிந்தவர்கள். ஆனால் கற்கவில்லை. இவர்கள் தலைமுறையினர் கல்வியறிவு அற்றவர்களாக இருந்ததன் விளைவாக பல்வேறு இன்னல்களைச் சந்தித்தனர். அந்த விளைவுகள் அவர்களின் வாழ்வில் பெரிய துன்பத்தை சந்தித்தை, *“இருளர்கள் படிப்பறிவு இல்லாத அப்பாவிகள்... வேறு யாராவது தவறு செய்தாலும் இருளரைப் போலியாக அதில் சேர்த்து நீதிமன்றத்தின் முன் நிற்க வைக்கும் கொடுமையும் நடந்திருக்கு... இதனால் பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளர்.” (வனம், ப.71)* என்றதன் வாயிலாக வனத்தில் நடக்கும் சில முறைகேடான செய்கைகளுக்கு இவர்கள் பலியாவதை அறிந்து கொள்ள முடிகின்றது. படிப்பறிவு இல்லாததால் இது போன்ற பிரச்சனைகளில் சிக்குண்டு சிதைவதோடு எந்த கணக்கு வழக்கும் தெரியமால் இருந்துள்ளனர்.




ஆனால் இந்த பிரச்சனைகள் அடுத்த தலைமுறைக்குத் தொடருதல் கூடாது என்பதற்காக தங்களது குழந்தைகளைப் படிக்க வைத்துள்ளனர். நஞ்சனின் மகள் பொன்னி என்ற இருளப் பெண் உண்டு உறைவிடப் பள்ளியில் கல்வி கற்றவளாக

ஆசிரியர் பதிவு செய்துள்ளார். கூலி வேலைக்குச் செல்லும் பெண்களின் கூலிக் கணக்கை பொன்னி பார்ப்பதை, *“பொன்னி முட்டத்து வயல் உண்டுறைவிடப் பள்ளியில் படிப்பை முடித்திருந்ததால் எழுதவும், படிக்கவும் நன்கு தேர்ச்சி பெற்றவளாய் இருந்தாள்........ கூலிக் கணக்கைச் சரியாக வைத்திருந்து இவளே வாங்கி.. கூட வந்து வேலை செய்தவர்களுக்கும் பட்டுவாடா செய்வாள்...” (வனம், ப.73)* என்ற ஆசிரியரின் கூற்று வழி இருளர் இன மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்வி மாற்றத்தைக் கொண்டு வந்ததைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இருளர் இனத்தில் ஆண்கள் இருப்பர். ஆனால் ஒரு பெண்ணுக்கு கல்வி முக்கியம் என்பதை உணர்ந்து ஆசிரியா பொன்னி கதாப்பாத்திரத்தை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**விவசாயத்தில் மாற்றம்**

நம் பூமியே ஒரு விவசாய பூமி. விவசாயமே நம்முடைய வாழ்வின் ஆதாரம். நாம் அனைவருமே விவசாய பெருங்குடியிலிருந்து வந்தவர்கள். விவசாயிகள் அனைவரும் தற்சார்பு வாழ்க்கையை மேற்கொள்பவர்கள். யாரிடமும் பசி என்று நில்லாமல் தாமகவே பூமியை தாயாக மதித்து வாழக்கூடியவர்கள். உலகமே உழவர்களை அதாவது விவசாயம் செய்யக்கூடிய மக்களை நம்பித்தான் இருக்கின்றது என்பதை,

*“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை”(குறள்.1031)*

என்ற குறட்பா உணர்த்துகின்றது.



இருளர்கள் காட்டுப் பகுதியில் வாழ்வதால் அவர்களுக்கு விவசாயம் கூலிகளாக இருக்கினர். ஆனால் விவசாயியாக மாறவில்லை. ஏனெனில் அவர்கள் வாழும் இடங்கள் மலைப் பகுதி. அங்கு விவசாயம் செய்வதற்கான எந்தவொரு சூழலும் இல்லை. பின்னானில் தற்சார்பு வாழ்வு வாழவேண்டும் என்பதற்காக அரசும் விவசாயம் செய்வதற்குத் துணையாக இருப்பதனை, *“பெரிய ரங்கன், பொன்னுசாமி, குமரன், மணியன் ஆகியோர் வனத்துறையால் அளந்து கொடுக்கப்பட்ட இருளர்கள் விவசாயம் செய்யும் நிலத்தின் ஓரத்தில் விழுந்து கிடந்த கடமான்....”(வனம், ப.81)* என்ற செய்தியிலிருந்து அறிய முடிகின்றது. மேலும், இவர்கள் விவசாயம் செய்தததையும், தாணிக்கண்டியில் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இருளர் இன மக்களுக்கு வனத்துறையினர் நிலத்தினை பிரித்துக் கொடுத்து அவர்களின் வாழ்வில் மாற்றம் உண்டாக்கியுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**அடிப்படைத் தேவைகளில் மாற்றம்**

சில நேரங்களில் தன்னுடைய தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால் நம்முடைய இனத்திற்கான தேவை என்றால் பொதுநலமாக செயல்படக் கூடியவர்கள் மட்டும் அத்தேவைகளை நிறைவேற்றுவர். இன்றைய காலத்தில் அதுவும் தொழில் நுட்ப வளர்ச்சியடைந்த காலத்தில் தேவைகள் உடனடியாக நிறைவேறும். ஆனால் இருளர்கள் பழங்குடிகள் வாழும் இடங்கள் மலை சார்ந்த பகுதிகள். அங்கு தமக்காக மட்டுமல்லாமல் தம்முடைய இனத்திற்கான தேவைகளை தனி ஒருவராக நின்று நிறைவு செய்வது நஞ்சன் என்பவன் மட்டுமே. தேவைகளை நிறைவு செய்வதை, *“தனக்குள்ளேயே நியாயத்தை வகுத்துக் கொண்டு... பிரச்சனைகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுபவன் நஞ்சன். மருதனின் மகன் என்பதால் மருதனுக்கான குணநலன்க்ள பெரிதும் இவனிடம் இருந்தது. தாணிக்கண்டியைப் பொருத்த வரை மின்விளக்கு எரியவில்லை என்றாலோ, பள்ளியில் வசதிகள் குறைவு என்றாலோ, ரோடு மழையால் பாதிப்படைந்து விட்டது என்றாலோ பஞ்சாயத்து அலுவலகத்திற்கும், ரேஞ்சராபீஸிற்கும் அலைபவன் நஞ்சன் ஒருவன் மட்டும் தான்”(வனம், ப.82)* என்று தெரிந்து கொள்ள முடிகின்றது.

அடிப்படைத் தேவைகளில் பிரச்சனை என்றால் அத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பவனாக இருக்கின்றான் நஞ்சன். எல்லோருக்கும் ஏற்றது நமக்கு என்று என்னும் மக்கள் மத்தியில் இவன் ஒருவனே பொதுநலம் சார்ந்து தேவைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்தவனாக இருக்கின்றான்.

## முடிவுரை

வனம் நாவலில் ஆசிரியர் கல்வியில் மாற்றம், விவசாயத்தில் மாற்றம், அடிப்படைத் தேவையில் மாற்றம் என்ற மூன்று வகையில் இருளர் இன மக்கள் மாற்றமடைந்ததை எடுத்துரைத்துள்ளார். பொன்னி என்ற பெண் கல்வி கற்ற நிலையினையும் அதன் மூலம் அவள் எழுத படிக்க கற்றுக்கொண்டதன் வாயிலாக இருளர் இன மக்களுக்கும் அது பயன்பட்டுள்ளது. விவசாயம் மூலம் தன்னிறைவு வாழ்கை வாழ்பவர்கள் தான் விவசாயிகள். மலைகளில் வாழும் அவர்கள் எதற்காகவும் வறுமை நிலையை அடைதல் கூடாது என்பதற்கா அவர்களுக்கு அரசாங்கமே விவசாய நிலங்களை கொடுத்துள்ளதால் அதில் இருளர் இன மக்கள் மாற்றத்தைச் சந்தித்துள்ளனர். இன்றைய சூழலில் தேவைகள் என்று அடிப்படைத் தேவைகள் வேண்டும். மலைப்பகுதிகளில் அதனை எதிர்பார்க்க முடியாது. ஆனால் தன்னலம் இல்லாமல் இருக்கும் இருளர் இன மக்களில் ஒருவனாக, அடிப்படைத் தேவைகளை அரசு மூலம் நிவர்த்தி செய்து கொள்ளும் ஒருவனாக நஞ்சன் இருக்கின்றான். இதன் வழி இருளர்களின் அடிப்படைத் தேவைகளில் மாற்றம் வந்துள்ளது. வாழ்வில் சில மாற்றங்களைத் தாங்களும், சில மாற்றங்களை அரசும் செய்துள்ளதை அறிய முடிகின்றது.இறுதியாக இம்மூன்று மாற்றங்களும் மனித வாழ்விற்கு தேவையானவை. இவை பழங்குடி மக்களான இருளர் மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியதை வனம் நாவல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## துணைநூற் பட்டியல்

1. ஆட்டனத்தி., வனம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2010
2. பரிமேலழகர் (உரை), திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், இராயப்பேட்டை, சென்னை, 2023
3. வானமாமலை.ந., மக்களும் மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2018

*****